**தி.ஐ. மெட்ரிக்குலேஷன் மேனிலைப் பள்ளி, அம்பத்தூர்**
**அரையாண்டுத் தேர்வு- திசம்பர், 2017**

மதிப்பெண்:60
நேரம் : 2.00மணி

**பகுதி-1**

**1) பொருள் தருக:** (2 மட்டும்) (2x1=2)
1. நகை 2. உபாயம் 3. மேனி 4. மறவர் 5. தாது

**2) பிரித்து எழுதுக :** (2 மட்டும்) (2x1=2)
1. கோலமிட்டு 2.தேசியப்பாடல் 3. வேடமணிந்து 4. மலர்க்கரம்
5. அருந்திறல்

(2x1=2)
**3) சேர்த்து எழுதுக: (2 மட்டும்)**
1.விடுதலை+உணர்வு 2.செய்மை+உற்ற 3.வான்+உறு 4.மெய்+ஞானம்
5. உயிர்+என

**4) கோடிட்ட இடத்தை நிரப்புக : (2 மட்டும்)** **(2x1=2)**
1. சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியவர் _________________.
2. _________________ நாடகவகை விடிய விடிய நடைபெறும்.
3. பெண்ணின் முகத்திற்கு _________________ஒப்புமையாகக் காட்டப்பட்டுள்ளது.
4. கம்பரை ஆதரித்த வள்ளல் ____________________.

**5) பொருத்துக:** **(3x1=3)**

| **ஆசிரியர்** | | **நூல்** |
|---|---|---|
| 1) பாரதத்தாய் | - | இருண்டவீடு |
| 2) பாவேந்தர் பாரதிதாசன் | - | தொன்னூல் விளக்கம் |
| 3) வீரமாமுனிவர் | - | குயில்பாட்டு |
| | - | அசலாம்பிகை அம்மையார் |

**பகுதி-2**

**6) அடிமாறாமல் எழுதுக:** **(4)**

1. 'தேன்நுகர்' எனத் தொடங்கும் விவேகசிந்தாமணிப் பாடல்.

**பகுதி-3 (செய்யுள்)**

**7) பின்வரும் குறுவினாக்களுக்கு விடை தருக: (2 மட்டும்)** **(2x2=4)**

1. 'முகைசெய் மேனி தழுவிமுத் திட்டலும்'- இப்பாடலடி மூலம் விடைதருக.
   1. மேனிதழுவி முத்தமிட்டவர் யார்?
   2. யாரைத்தழுவி முத்தமிட்டார் ?

2. திருமந்திரத்தின் வேறு பெயர் என்ன ?அது எத்தனை பாடல்களைக் கொண்டது ?

3. வீரமாமுனிவர் இயற்றிய நூல்களுள் நான்கினை எழுதுக.

4. பாரதிதாசன் இயற்றிய நூல்கள் ?

**8) பின்வரும் சிறுவினாக்களுக்கு விடை தருக : (2 மட்டும்) (2x3=6)**

1.காந்தியடிகளின் பண்பு நலன்களைப் பாரதத்தாய் பாடல்வழிக் குறிப்பிடுக.

2. தாய் மரியாள், குழந்தை இயேசுவிடம் காட்டிய அன்பு எதைப் போன்றுஇருந்தது ?

3. விவேகசிந்தாமணிப் பாடலில் அமைந்துள்ள கற்பனை நயத்தை விளக்கி எழுதுக.

4. ஆலமரத்தின் விழுதும் வேரும் எவ்வெவற்றைப் போன்று காட்சியளித்தன எனப் பாரதிதாசன் பாடுகிறார் ?

**பகுதி-4 (உரைநடை)**

**9) பின்வரும் குறுவினாக்களுக்கு விடை தருக: (2 மட்டும்) (2x2=4)**

1. ‘சிவகங்கையை ஆண்ட மன்னர் யார் ?அவர் மனைவி பெயர் என்ன ?
2. பாவைக்கூத்தின் வகைகள்யாவை ?
3. நொண்டிநாடகம் -குறிப்பு எழுதுக.
4. இயற்கைச் சமநிலை என்றால் என்ன ?

**10)பின்வரும் சிறுவினாக்களுக்கு விடை தருக : (2 மட்டும்) (2x3=6)**

1. அஞ்சலையம்மாள் நடத்திய போராட்டங்கள் யாவை ?
2. விடுதலைப் போராட்டக் காலத்தில் தோன்றிய நாடகங்கள் எவை ?
3. சிலப்பதிகாரத்தில் நாடகம் பற்றிய குறிப்புகளைப் புலப்படுத்துக.
4. காடுகளால் விளையும் நன்மைகள் யாவை ?

**பகுதி-5**

**11)பின்வரும் நெடுவினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விரிவான விடை தருக :** (1x7=7)

1. வேலு நாச்சியார் சிவகங்கைச் சீமையை மீட்டெடுத்த நிகழ்வினைத் தொகுத்து எழுதுக.
2. பின்வரும் நாடக ஆசிரியர்கள் பற்றிய குறிப்புத் தருக.
   அ) பம்மல் சம்மந்தனார்
   ஆ) ஔவை சண்முகனார்

**பகுதி-6 (இலக்கணம்)**

**12)பின்வரும் இலக்கண வினாக்களுக்கு விடை தருக: (2 மட்டும்) (2x2=4)**

1. சினையாகு பெயரைச் சான்றுடன் விளக்குக.
2. ஆகுபெயர் என்றால் என்ன ?.
3. முக்காலமும் மறைந்து வரும் தொகை எது ?சான்று தருக.
4. கருத்தா எத்தனை வகைப்படும் ? சான்று தருக.

**13) பின்வரும் இலக்கணப் பயிற்சிகளை நிறைவு செய்க :** **(4x1=4)**
**பொருத்துக :**

| | | |
|---|---|---|
| 1) ஊறுகாய் | - | உம்மைத்தொகை |
| 2) தாமரைமுகம் | - | வினைத்தொகை |
| 3) இராமன் இலக்குவன் | - | பண்புத்தொகை |
| 4) வெண்ணிலவு | - | உவமைத்தொகை |
| | _ | வேற்றுமைத்தொகை |

**14)பின்வரும் தொடர்கள் எவ்வகை ஆகுபெயர் என எழுதுக.(3மட்டும்)**
(3x1=3)

1) வகுப்பு சிரித்தது 2) திசம்பர் பூத்தது 3) அவியல் உண்டான்
4)வெள்ளை உடுத்தினாள்

**பகுதி-7 (துணைப்பாடம்)**

**15)கீழ்க்காணும் தொடர்கள் சரி/தவறு என எழுதுக.** **(3x1=3)**

1. மன்னுயிருக்கெல்லாம் வரம் மரம்தான் என்பதனை மனிதன் மறந்தான்.
2.'கண்திறந்தது' துணைப்பாடக் கதையில் கல்பனா சாவ்லா பற்றிக் குறிப்பிடப்படுகிறது.
3.'எங்கள் அழிவு உங்களின் பேரழிவு' என்று கண்ணன் மரத்திடம் கூறினான்.

**16) பின்வரும் துணைப்பாட வினாக்களுக்கு விடை தருக: (1 மட்டும்)** **(1x4=4)**

1. 'மரம் கண்ணனிடம் கண்ணீர் மல்கக் கூறியது யாது ?
2. பெண்கல்வியின் சிறப்பினைக் 'கண்திறந்தது' வீதிநாடகத்தின் வழி விளக்குக.
3. அருங்காட்சியகத்தில் நாம் என்னென்ன பொருள்களைப் பார்க்கலாம் ?

******************